

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடலூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் காணொளி காட்சி வாயிலாக,பள்ளிக் கல்வித்துறை சார்பில்,நீலகிரி மாவட்டத்தில் ரூ.4.76 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட கூடுதல் வகுப்பறைகள், கட்டடங்கள் மற்றும் ஆய்வகத்தினை (22.02.2025) திறந்து வைத்ததை தொடர்ந்து, நீலகிரி மாவட்டம் குன்னூர் மேலூர்ஒசட்டி மற்றும் அதிகரட்டி அரசு மேல்நிலைப்பள்ளிகளில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் வகுப்பறைக் கட்டிடங்களை பார்வையிட்டார். உடன் சார் ஆட்சியர் செல்வி. சங்கீதா,பள்ளியின் தலைமை ஆசிரியர்கள்,ஆசிரியர்கள்,அரசுத் துறை அலுவலர்கள் உட்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் வாழப்பாடியில் ரூ. 8.70 கோடி மதிப்பில் புதியதாக ஈரடுக்கு பேருந்து நிலையம் கட்டி முடிக்கப்பட்டது. இந்நிலையில் விரைவில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி மூலம் திறந்து வைக்க உள்ளார். இதனையடுத்து அதன் பணிகளை கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ. ஆறுமுகம், ஒன்றிய செயலாளர்கள் சக்கரவர்த்தி, மாதேஸ்வரன், மற்றும் திமுக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### தமிழ்நாட்டுக்கு கல்வி நிதியை தர மறுக்கும்

# ஒன்றிய கல்வி அமைச்சரைக் கண்டித்து கருப்புப் பட்டை அணிந்து போராட்டம்!

## அரசு ஊழியர்கள் – ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் அறிவிப்பு!

சென்னை, பிப். 24-

அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் சார்பில் ஒதுக்கிய நிதி ரூ 2152 கோடியை தேசி கல்விக் கொள்கையை எற்றால் மட்டுமே விடுவிக்க முடியும் என ஒன்றிய கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் பேச்சை கண்டித்து தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் ஒருவாரம் கருப்பு பட்டை அணிந்து போராட்டம் என நிறுவனத் தலைவர் சா.அருணன் அறிவித்துள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு:-

ஒன்றிய அரசு அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் சார்பில் ஒதுக்கீடு செய்த சுமார் ரு 2152 கோடியை விடுவிக்காமல் தமிழகத்தை வஞ்சிக்கிறது அதாவது ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ள மும்மொழி கொள்கையான புதிய கல்விக் கொள்கையை தமிழ்நாட்டிலும் அமல்படுத்த வேண்டும் அப்படி அனுமதித்தால் மட்டுமே நிதியை விடுவிக்க இயலும் என்று தெரிவித்து ஏற்கனவே நிதியை குஜராத்திற்கும் உத்திரபிரதேச மாநிலத்திற்கும் மடைமாற்றம் செய்து ஓர வஞ்சனை செய்துள்ளது



அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் மூலமாக தான் 12 ஆயிரம் பகுதி நேர சிறப்பாசிரியர்கள், ஆசிரியர் பயிற்றுனர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பராமரிப்பு ஆசிரியர்கள் என 15 ஆயிரம் ஆசிரியர்களின் ஊதியம் வகுப்பறை கட்டடங்கள், கட்டடங்கள் பழுது பாரத்தல் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், ஆசிரியர்களுக்கான அனைத்துவகை பயிற்சிகள் மேற்கொள்ள இந்த நிதியை தான் பயன்படுத்துகின்றனர் ஆனால் ஒன்றிய அரசு மும்மொழிக் கொள்கையான புதிய கல்விக் கொள்கையை தமிழ்நாட்டில் அமல்படுத்தினால் மட்டுமே ரூ.2152 கோடியை விடுவிக்க இயலும் என தெரிவித்து நிதியை உத்திரப் பிரதேசம் மற்றும் குஜராத் மாநிலங்களுக்கு மடைமாற்றம் செய்து மிரட்டுகிறது,

இது எதனால் என்றால் இந்தியையும் சமஸ்கிருத மொழியையும் தமிழ்நாட்டில் கொண்டுவந்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மாணவர்கள் நலனில் தாய் தந்தைக்கு நிகராக காலை உணவு திட்டம் ,மேற்படிப்பில் சாதித்து பல துறைகளில் வேலை யாப்பு பெற நான் முதல்வன் திட்டம் , புதுமை பெண் திட்டம் கல்லூரி கனவு , தமிழ் புதல்வன் திட்டம் உள்ளிட்ட பல திட்டங்களை கொண்டு வந்து இந்தியாவின் முதன்மை முதலமைச்சர் என்பதை பறைச்சாற்றுகின்றார்

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வடிவமைத்து செயல்படுத்திவரும் திட்டங்களை தடுத்து நிறுத்தி தமிழ்நாட்டு மாணவர்களையும் இளைஞர்களின் கல்வியை சீரழித்து தமிழ்நாட்டு கல்வித்தரத்தை சிதைத்து சின்னாபின்னமாக்க நினைக்கிறது ஒன்றிய அரசு ,

மாற்றான் தாய் மனப்பான்மை எண்ணத்தில் பி.எம்.ஸ்ரீ திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு சேர வேண்டிய ரூ. 2152 கோடியை உத்திரபிரதேசம் மாநிலத்திற்கும் குஜராத் மாநிலத்திற்கும் மடை மாற்றம் செய்ததை தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் வன்யாமைக கண்டிக்கிறோம்.

மேலும் ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் புதிய கல்விக் கொள்கையை என்றால் மட்டுமே நிதியை ஒதுக்க முடியும் என்ற அறிவிப்பு ஒன்றிய அரசின் அடாவடித் தனத்தை பறைச்சாற்றுகிறது. இதை தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு வன்மையாக கண்டிக்கிறது.

மேலும் மடை மாற்றம் செய்து உத்திரபிரதேச மாநிலத்திற்கும் குஜராத் மாநிலத்திற்கும் ஒதுக்கப்பட்ட நிதியை திரும்ப பெற்று அந்த நிதியை உடனே தமிழ்நாட்டிற்கு வழங்கவேண்டும் என்பதை வலியுறுத்தி தமிழ்நாடு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் இன்று முதல் ஒரு வாரக் காலத்திற்கு கருப்புப் பட்டை அணிந்து பணிக்கு செல்வார்கள் , அப்படியும் செவிக் கொடுக்காத படசத்தில் அனைத்து சங்கங்கள் சார்பில் போராட்டங்களை நடத்துவோம் என்பதை தெரித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு சா.அருணன் அறிவித்துள்ளார்.




தி.மு.க.

இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

ஒன்றிய–நகர–பகுதி–பேரூர்
புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–3 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற்று வருகிறது. மூன்றாம் கட்டமாக திருவண்ணாமலை தெற்கு, திருவண்ணாமலை வடக்கு & வேலூர் ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 26.02.2025 புதன்கிழமை | காலை 9.00 மணி | வேலூர் | எல்.கே.என். மஹால், காட்பாடி – குடியாத்தம் சாலை, லத்தேரி, வேலூர் |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 21-02-2025




# கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. அறிக்கை!

கள்ளக்குறிச்சி, பிப். 24-

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. அறிக்கை வருமாறு:-

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழகம் சார்பில் செயற்குழு ஆலோசனை கூட்டம் 24.02.2025 இன்று (திங்கட்கிழமை) மாலை 4.00 மணியளவில் மாவட்ட கழக அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற இருப்பதால்,

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய,நகர, பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாள் விழா சிறப்பாக கொண்டாடுவது குறித்தும், கழக ஆக்க பணிகள் குறித்தும் ஆலோசிக்கப்படவிருக்கிறது.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.



மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார் சட்ட மன்ற தொகுதியில் பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன் ஏற்பாட்டில் இரண்டாம் மக்கள் குறைதீர்க்கும் முகாம் குத்தாலம் மேற்கு ஒன்றியம் கோமல், கொழையூர், மருத்தூர் ஊராட்சிகளுக்கு கோமளில் நடைபெற்றது. முகாமில் பொதுமக்களிடம் மனுக்களை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்ய நாதன் பெற்றார். உடன் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சுதா, மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜ்குமார், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எம். எம்.சித்திக், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் சௌமியன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.எம்.ரவி, மாவட்ட துணை செயலாளர் எஸ் செல்வமணி, குத்தாலம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஏ.ஆர்.ராஜா :மயிலாடுதுறை கிழக்கு ஒன்றிய செயலாளர் ப.முருகமணி, .பொதுக்குழு உறுப்பினர் ஹர்ஷத், ஒன்றிய குழு முன்னாள் தலைவர் மகேந்திரன் மற்றும் பலர் உள்ளனர்.



நாமக்கல் கிழக்கு மாவட்டம் நாமகிரிப்பேட்டை ஒன்றியம், கார்கூடல்ப்பட்டி ஊராட்சி, கே.கணவாய்ப்பட்டி அதிமுக கிளை செயலாளர் ஏ. வேலுசாமி தலைமையில் 50 க்கும் மேற்பட்டோர் அ.தி.மு.க.விலிருந்து விலகி நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் முன்னிலையில் கழகத்தில் தங்களை இணைத்து கொண்டனர். நாமகிரிப்பேட்டை ஒன்றிய கழக செயலாளர் கே.பி.இராமசுவாமி ஏற்பாட்டில் சார்பு அணி துணை அமைப்பாளர்கள் நந்தகுமார், ஜெகதீசன், சாதிக்பாட்ஷா, மணி, ஒன்றிய பொருளாளர் தன்ராஜ், ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் சக்திவேல், கிளை கழக செயலாளர்கள் பூபதி, மோகன்ராஜ், செல்வம், தங்கவேல், ராஜா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.





முதலமைச்சர் அவர்கள் 20.02.2025 அன்று தலைமைச் செயலகத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் பல்வேறு புதிய கட்டடங்களை திறந்து வைத்து, புதிதாக கட்டப்படவுள்ள கூடுதல் வட்ட செயல்முறை கிடங்குகளுக்கு அடிக்கல் நாட்டினார். அதனைத்தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம், வட்டம், பெருங்களூர் கிராமம், புதிய நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, கலந்துகொண்டார். உடன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மண்டல மேலாளர் எம்.சீதாராமன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



நாகை மாவட்டம் நாகை நகர திமுக சார்பில் ஒன்றிய பா.ஜ.க. அரசு மும்மொழிக் கொள்கை என்ற பெயரில் இந்தி திணிப்பை எதிர்த்து நாகை அவுரி திடலில் நாகை மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் நாகை நகர கழக செயலாளர் நகர் மன்ற தலைவர் இரா.மாரிமுத்து, மாவட்ட கழக பொருளாளர் மு. லோகநாதன், நகர நிர்வாகிகள் ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, எஸ்.பால்ராஜ், பெ.முருகானந்தம் ,தமிழ் செல்லம், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை தலைவர் இரா. தங்கதுரை நாகை நகரக் கழக நிர்வாகிகள் பி.திலகர், வெற்றிலை கடை சிவா, சித்ரா குலத்துடன், ரமணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.